செ.வெ.எண்:06 நாள்:03.01.2018

<u>பத்திரிக்கை செய்தி</u>

## பிரதமரின் இந்தியா எழுச்சி திட்டம் (STAND UP INDIA)

பிரதமரின் இந்தியா எழுச்சி திட்டம் மத்திய அரசினால் அனைத்து வங்கிகள் மூலம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி மாவட்டத்தில் ஒவ்வொரு வங்கி கிளையிலும் ஒரு ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் ஒரு மகளிருக்கு ரூ10 லட்சம் முதல் ரூ100 லட்சம் வரை உற்பத்தி, சேவை மற்றும் வியாபார தொழில்களுக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் 01.04.2017 முதல் 31.12.2017 வரை 52 பயனாளிகளுக்கு ரூ7.06 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அனைத்து வங்கிகளும் மாவட்ட தொழில் மைய கடன் திட்டங்களான பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் (PMEGP) 15 சதவீதம்/25 சதவீதம்/35 சதவீதம் மானியத்துடனும் மற்றும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (NEEDS) 25 சதவீதம் மானியத்துடனும் செயல்படுத்தக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

எனவே புதியதாக தொழில் தொடங்க தகுதியானவர்கள் மற்றும் விருப்பமுள்ளவர்கள் வங்கிக் கிளைகளுக்கு சென்று மேற்கண்ட திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களை சமர்ப்பித்து பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சி தலைவர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி அவர்கள் தெரிவித்துள்ளார்..

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.